


03.01. 2025

## தலைப்புச் செய்திகள்

1. புதுதில்லியில் 4 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை பிரதமர் திரு.நரேந்திரமோடி சற்றுமுன் துவக்கிவைத்தார்.

2. புதிய கல்வி கொள்கை தொழில்துறை மற்றும் கல்வி நிறுவனங்களுக்கிடையே இணைப்பு பாலமாக செயல்படுகிறது என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் மாணாக்கரின் படைப்பாற்றல் திறனை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன் கூறியுள்ளார்.

4. கோவை உப்பிலிபாளையம் பகுதியில் விபத்துக்குள்ளான எரிவாயு டேங்கர் லாரியின் பழுது சரிசெய்யப்பட்டு இருகூர் பகுதிக்கு கொண்டு செல்லப்படுகிறது.

5. சிட்னியில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான 5-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 185 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**இனி விரிவான செய்திகள்**

ழுழுழுழுழுழுழுழுழுழு

**பிரதமர்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி புதுதில்லியில் 4 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை இன்று துவக்கிவைத்தார்.

அசோக் விகாரில் புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான சாவிகளை பயனாளிகளிடம் ஒப்படைத்த பிரதமர் அக்குடியிருப்புகளை பார்வையிட்டார்.

நவ்ரோஜியில் நகர்புற மேம்பாட்டு திட்டங்கள்,

300 கோடி ரூபாய் மதிப்பில் ஊடீளுநு-இன் ஒருங்கிணைந்த வளாகம் ஆகியவற்றையும் பிரதமர் திறந்துவைத்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**வேலுநாச்சியார் - சாவித்ரிபாய்**

சுதந்திர போராட்ட வீராங்கனை வீரமங்கை வேலுநாச்சியாரின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி விடுத்துள்ள செய்தியில் ஆங்கிலேய அடக்குமுறை ஆட்சிக்கு எதிராக தன்னிகரற்ற துணிச்சலுடனும், அரசியல் சாதுரியத்துடனும் அவர் ஆற்றிய அளப்பரிய பங்கை நினைவுகூர்ந்தார்.

விடுதலைக்கான அவரது அர்ப்பணிப்பு மிகு போராட்டம், எதிர்கால சந்ததியினருக்கு என்றென்றும் உத்வேகம் அளிக்கும் என்று புகழாரம் சூட்டிய பிரதமர், மகளிருக்கு அதிகாரம் அளிப்பதில் அவரது செயல்பாட்டை பாராட்டியுள்ளார்.

பிரபல சமூக சீர்திருத்தவாதியும், கல்வியாளருமான சாவித்ரிபாய் ஃபூலே-யின் பிறந்த தினத்தை ஒட்டி அவருக்கு அஞ்சலி செலுத்திய பிரதமர், மகளிர் ஆளுமை, சமூக சீர்திருத்தங்கள், கல்விதுறை ஆகியவற்றின் முன்னோடியாகவும், கலங்கரை விளக்கமாகம் அவர் திகழ்ந்தார் என்று கூறியுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**அஷ்விணி வைஷ்ணவ்**

புதிய கல்வி கொள்கை தொழில்துறை மற்றும் கல்வி நிறுவனங்களுக்கிடையே இணைப்பு பாலமாக செயல்படுகிறது என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

குஹாட்டியில் காணொலி மூலம் பல்வேறு புதிய திட்டங்களை இன்று துவக்கிவைத்து பேசிய அவர் கிழக்கு சார் கொள்கையை வட கிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்காக பிரதமர் பயன்படுத்தியதால் ஏராளமான முதலீடுகள் அப்பகுதிகளில் குவிந்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**அமித்ஷா**

ஐ லேண்ட் டெவெலப்மென்ட் ஏஜென்சி எனப்படும் தீவுகள் மேம்பாட்டு முகமையின் 7ஆவது கூட்டம் மத்திய

உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

அந்தமான் நிக்கோபார் தீவுகளின் துணை நிலை ஆளுநர் திரு. தேவேந்திர குமார் ஜோஷி, லட்சதீவு நிர்வாக தலைவர் திரு. பிர.ஃபுல் பட்டேல், மத்திய உள்துறை செயலர் திரு. கோவிந்த் மோகன் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

நாட்டில் உள்ள தீவுகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் 2017ஆம் ஆண்டு இம்முகமை ஏற்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**ஜக்தீப்தன்கர்**

குடியரசு தின அணிவகுப்பு நிகழ்ச்சியில் பங்கேற்கும் தேசிய மாணவர் படை முகாமை குடியரசு துணைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் நாளை மறுநாள் துவக்கிவைக்கிறார்.

இம்முகாமில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த தொள்ளாயிரத்து 17 மாணவ மாணவிகள் உட்பட 2 ஆயிரத்து 300 மாணாக்கர் இடம்பெற்றுள்ளதாக தேசிய மாணவர் படை தலைமை இயக்குனர் லெப்டினன் ஜென்ரல் குர்பிர்பால் சிங் தெரிவித்துள்ளார்.

வரும் 27ஆம் தேதிவரை குடியரசு தின தேசிய மாணவர் படை முகாம் செயல்பாட்டில் இருக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்த முகாமில் உள்ள மாணாக்கர் வரும் 26ஆம் தேதி குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்க இருப்பதாக அவர் தெரிவித்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**ஜெய்சங்கர்**

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், இந்தியாவிற்கு வந்துள்ள மாலத்தீவு வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல்லா கலீலுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

பொருளாதாரம் கடல்சார் ஒத்துழைப்பு உள்ளிட்ட பிரிவுகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து இரு அமைச்சர்களும் விவாதித்தனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**மீனவர்கள் விடுதலை**

பங்களாதேஷ் நாடு கைது செய்த இந்திய மீனவர்கள் 95 பேரும்,

இந்தியா கைது செய்த பங்களாதேஷ் நாட்டை சேர்ந்த 90 மீனவர்களும் இன்று பரஸ்பரம் அந்தந்த நாட்டு கடலோர காவல்படையிடம் ஒப்படைக்கப்படுகின்றனர்.

இப்பணிகள் வரும் ஞாயிற்றுக்கிழமைக்குள் முழுமையாக நிறைவடையும் என்று வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதேபோல் மீனவர்களின் மீன்பிடி படகுகளும் பரஸ்பரம் ஒப்படைக்கப்படுகின்றன.

கடந்த அக்டோபர் நவம்பர் மாதங்களில் இந்திய மீனவர்களை பங்களாதேஷ் கடற்படையினர் கைது செய்த நிலையில் நேற்று இம்மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**கீதாஜீவன்**

தமிழகத்தில் மாணாக்கரின் படைப்பாற்றல் திறனை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் பொருநை இலக்கிய விழாவை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர் திருக்குறள், பாரதியின் படைப்புகள் மூலம் தமிழகத்தின் தொன்மை வாய்ந்த கலாச்சாரத்தை இளம் தலைமுறையினர் அறிந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழு

**சேகர்பாபு**

வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு தமிழகத்தின் அனைத்து பெருமாள் திருக்கோவில்களிலும் சிறப்பு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோவிலில் இன்று ஆய்வு மேற்கொண்ட அவர், வைகுண்ட ஏகாதசி அன்று இத்திருக்கோவிலில் முதியவர்கள், கர்ப்பிணி பெண்கள், மாற்றுத்திறனாளிகள் காலை 8

மணிமுதல் 10 மணிவரை சிறப்பு தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்றார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**நேரு**

திருச்சி மாவட்டம் முசிறி மற்றும் லால்குடி பகுதிகளில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் கட்டப்பட்டுள்ள ஊராட்சிமன்ற கட்டிடம், சமுதாய வளாகங்கள், அங்கன்வாடி மையங்களை மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு இன்று தொடங்கிவைத்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் உடனிருந்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**டோக்கன்**

தமிழ்நாட்டில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பிற்கான டோக்கன் விநியோகிக்கும் பணிகள் இன்று தொடங்கின.

நியாயவிலைக்கடை ஊழியர்கள் இட்டோக்கனை வீடு வீடாக சென்று வழங்கி வருகின்றனர்.

அடுத்த 4 நாட்களில் டோக்கன் வழங்கும் பணிநிறைவடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வரும் 9ஆம் தேதிமுதல் நியாயவிலைக்கடைகளில் மக்கள் பொங்கல் பரிசுதொகுப்பை பெற்றுக்கொள்ளலாம்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**டேங்கர் லாரி**

கோவை உப்பிலிபாளையம் பகுதியில் விபத்துக்குள்ளான எரிவாயு லாரியின் பழுது சரிசெய்யப்பட்டு இருகூர் பகுதியில் உள்ள எரிவாயு நிறுவன வளாகத்திற்கு கொண்டு செல்லப்படுவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கிராந்திகுமார் பாடி தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இந்த லாரியும் கேஸ் எரிவாயு கண்டைனரும் கவிழ்ந்ததை அடுத்து உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு எரிவாயு கசிவு நிறுத்தப்பட்டதாக கூறினார்.

**வாய்ஸ்**

ழுழுழுழுழுழுழுழுழுழு

**துரைமுருகன்**

வேலூர் காட்பாடியில் மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் மற்றும் திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கதிர் ஆனந்த் இல்லங்களில் இன்றுகாலைமுதல் அமலாக்கத்துறையினர் சோதனைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 2019ஆம் ஆண்டு நடைபெற்றதாக கூறப்படும் வரி ஏய்ப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாக இந்த சோதனைகள் நடைபெறுகின்றன.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**வீரபாண்டிய கட்டபொம்மன்**

சுதந்திரபோராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மனின் 266ஆவது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறில் அன்னாரது

மணிமண்டபத்தில் அரசின் சார்பில் இன்று மரியாதை செலுத்தப்பட்டது.

ழூழூழூழூழூழூழூழூழூழூ

இருவரி

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை முன்னிட்டு முகூர்த்தகால் நடும் நிகழ்ச்சியில் மாநில வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.மூர்த்தி இன்று பங்கேற்றார்.

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை கரையான்குழி பகுதியில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் 6ஆவது சுற்று பணிகளை ஆட்சித்தலைவர் திருமதி அழகுமீனா இன்று துவக்கிவைத்தார்.

இதேபோல் கடலூரிலும் இம்முகாமை ஆட்சித்தலைவர் திரு. சிபி ஆதித்யா துவக்கிவைத்துள்ளார்.

தேசிய மின்சிக்கன வார விழாவை ஒட்டி கிருஷ்ணகிரி மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் விழிப்புணர்வு பேரணிகளை அந்தந்த ஆட்சித்தலைவர்கள் இன்று தொடங்கிவைத்தனர்.

நாமக்கல் மாவட்டத்தில் வேளாண் பொறியியல் உபகரணங்கள் மானியத்தில் வழங்கப்பட இருப்பதால் விவசாயிகள் இதனை பெற்று பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் டாக்டர் உமா கூறியுள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில் வுீளுஊ போட்டித்தேர்விற்கு பயிற்சி மேற்கொள்ள, தாட்கோ மூலம் நிதி உதவி அளிக்கப்பட உள்ளதால் தகுதிவாய்ந்த ஆதி திராவிடர்

பழங்குடியின மாணாக்கர் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே கொளத்தூரில் யானை தந்தங்கள் கடத்திவந்த 5 பேர் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து 2 ஜோடி யானை தந்தங்களை வனத்துறையினர் பறிமுதல் செய்தனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**தண்ணீர் திறப்பு**

தர்மபுரி மாவட்டம் சின்னாறு நீர்தேக்கத்திலிருந்து புதிய ஆயக்கட்டு பகுதி பாசனத்திற்காக 395 மில்லியன் கன அடி தண்ணீரை ஆட்சித்தலைவர் திருமதி சாந்தி இன்று திறந்துவைத்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

**உறைபனி**

உதகை மற்றும் கொடைக்கானல் மலை பகுதியில் கடும் பனி காரணமாக புல்வெளிகளில் உறைபனி காணப்படுவதாக எமது நீலகிரி, திண்டுக்கல் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**வாய்ஸ்**

ழுழுழுழுழுழுழுழுழுழு

**தென்காசி:**

தென்காசி மாவட்டத்தில் தேங்காய் வரத்து வெகுவாக குறைந்ததால், தேங்காயின் விலை அதிகரித்துள்ளது.

இதனால் சாமானிய மக்களால் வாங்க முடியாத நிலை ஏற்பட்டு, வியாபாரம் பாதிக்கப்படுவதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்.

- - வாய்ஸ் - -

ழுழுழுழுழுழுழுழுழுழு

**விழுப்புரம் வாய்ஸ்:**

விழுப்புரம் மாவட்டத்தில் மத்திய அரசின் **'ஏற்றுமதி மையமாக மாவட்டம்'** என்ற திட்டத்தின்கீழ், விழிப்புணர்வு ஆலோசனை கருத்தரங்கு வரும் 6ம் தேதி நடைபெற உள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்.

- - வாய்ஸ் - -

- ழுழுழுழுழுழுழுழுழுழு

**மேட்டூர்**

மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு 10 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

இதன்காரணமாக சுரங்க மின் நிலையம் மற்றும் அனல்மின் நிலையங்களில் மின் உற்பத்தியும் தொடங்கியுள்ளது.

அணையின் நீர்மட்டம் 120 அடியாகும்.

**ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று** இரண்டாயிரம் கன அடியாக உள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

கடலூர் - விடுமுறை

சிதம்பரம் அருள்மிகு நடராஜர் சுவாமி திருக்கோவில் ஆருத்ரா தரிசன விழாவை முன்னிட்டு வரும் 13ஆம் தேதி கடலூர் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை விடப்படுவதாக ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

அதற்குபதிலாக அடுத்த மாதம் ஒன்றாம் தேதி சனிக்கிழமை வேலை நாளாக இருக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

கிரிக்கெட்

சிட்னியில் இந்தியாவிற்கு எதிரான பார்டர் கவாஸ்கர் கோப்பை 5-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேர இறுதியில் ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸில் 1 விக்கெட் இழப்பிற்கு 9 ரன் எடுத்தது.

முன்னதாக இந்தியா தனது முதல் இன்னிங்சில் 185 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழுழுழுழுழுழுழுழுழுழு